தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1982 மார்ச் 9

மாசி 25, துன்மதி—திருவள்ளுவர் 2013

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராஜாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

உண்ணற்க கள்ளை உணில்உண்க சான்றோரான்
எண்ணப் படவேண்டா தார்.

கள்ளை உண்ணக் கூடாது. சான்றோரால் நன்கு எண்ணப் படுவதை விரும்பாதவர் கள்ளை உண்ண வேண்டுமானால் உண்ண லாம்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

ஆம்பூர், வாணியம்பாடி நகர தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்குத் தனி மின் இணைப்புகள் வழங்கும் திட்டம்.

*வினா எண். 421—திரு. ந. குலசேகரபாண்டியன் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் ஆம்பூர், வாணியம்பாடி நகரங்களில் உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்குத் தனி மின்சார லைன்கள் வாயிலாக இணைப்புகள் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) மற்றும் (ஆ) : ஆம்பூர் பகுதியில் தோல் பதனிடும் எட்டு தொழிற்சாலைகளுக்கு மின் பயனீட்டாளர்களின் செலவில் தனி மின் கம்பித் தொடர் அமைக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. விரைவில் நிறைவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. வாணியம்பாடி பகுதியிலுள்ள இத்தகைய தொழிற்சாலைகளுக்குத் தனி மின் கம்பித் தொடர் அமைக்கும் செயற் குறிப்புகள் மின் வாரியத்தின் பரிசீலனையில் இல்லை;

திரு. ந. குலசேகரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்பூர் நகருக்கு இப்படித் தனி மின்சார இணைப்புகள் வழங்குவது குறித்து அறிவித்தமைக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே போன்று வாணியம்பாடி நகரிலும் தோல் பதனிடும் தொழிற்சாலையின் அதிபர்கள் இப்படித் தனி இணைப்புகள் வேண்டும் என்று கேட்க முன் வருவார்களேயானால் அரசு அதைச் செய்து தர ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அரசு நிச்சயமாக ஆவன செய்யும்.

திரு. ந. குலசேகரபாண்டியன் : தலைவரவர்களே, இப்படி ஆம்பூர் நகரிலுள்ள தொழிற்சாலைகளுக்குத் தனியாக இணைப்புகள் வழங்குவதன் மூலம் அரசுக்கு ஏற்படும் மொத்தச் செலவு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இதிலே, அரசுக்குச் செலவு இல்லை. இந்தத் தனி வசதியைத் தொழில் அதிபர்கள் விரும்புகின்ற காரணத்தால் இதற்கு ஆகின்ற செலவை அவர்களே ஏற்றுக் கொள்கிறார்கள். 3,82,962 ரூபாய் தொழில் அதிபர்கள் கட்டிய பணத்தில் இந்த வேலை நடைபெறுகிறது.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று தனி லைன்களை அந்தத் தொழில் அதிபர்களுக்குக் கொடுப்பதில் யாருக்கும் ஆட்சேபணை இல்லையா ? இதனால் அந்தப் பகுதி விவசாயிகளுக்குப் பாதிப்பு ஏற்படுமா? அந்த மின் இணைப்புத் தொழிற்சாலைகளுக்குச் செல்லும்போது விவசாயிகளுக்குப் போதிய மின்சாரம் கிடைக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, விவசாயிகளுக்குக் கொடுப்பதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புதிய மின் திட்டங்கள்.

*வினா எண். 422—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இரண்டாயிரம் மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் புதிய திட்டத்திற்கு மத்திய அரசிடம் தமிழ் மாநில அரசு அனுமதி கோரியுள்ளதா ?

(ஆ) ஆமெனில், இது பற்றிய விவரம் என்ன ?

(இ) மத்திய அரசின் பதில் என்ன ?